தாயே யசோதா உந்தன் ஆயற்குலத்தில் உதித்த
மாயன் கோபால க்ருஷ்ணன் செய்யும் சாலத்தை கேளடி (தாயே )

தையலே கேளடி உந்தன் பையனைப்போலவே
இந்த வையகத்தில் ஒரு பிள்ளை
அம்மம்மா நான் கண்டதில்லை (தாயே )

காலினில் சிலம்பு கொஞ்ச கைவளை குலுங்க முத்து மாலைகள் அசைய
தெரு வாசலில் வந்தான்
அவன் காலசைவும் கைஅசைவும்
தாளத்தோடு இணைந்துவர நீலமேக
கண்ணன் அவன் நர்தனம் ஆடினான் ( தாயே )

இவனை பாலன் என்று தாவி
அணைத்தேன் அணைத்த என்னை
மாலை இட்டவன் போல் வாயில் முத்தமிட்டாண்டி
பாலன் அல்லடி உன் மகன் சாலம் மிக செய்வதெல்லாம்
நாலு பேர்கள் கேட்க சொன்னால் நாணம் மிகஆகுதடி (தாயே )

இல்லை இல்லை இல்லை அம்மா
இத்தனை பேர் சொல்லுவதும்
அத்தனையும் பொய்யே அம்மா

நாலு பேர்கள் மத்தியிலே சொல்ல நாணமாகுதென்ற இவள்
நாற்பது பேர் மத்தியிலே சொல்லலாமா ( இல்லை )

அன்றொரு நாள் எங்கள் மனை வந்த இரு விருந்தினர்
அயர்ந்து படுத்துறங்கும் போதினிலே
திருடி- தின்றது போக கைய்யில் இருந்த வெண்ணையை
விருந்தினர் வாயில் தடவி சென்றனனே ( தாயே )

விருந்தினர் வாயில் பூச வெண்ணை காணுமா
இல்லை வெண்ணை பூசுகின்றவரை தூங்கவேணுமா (இல்லை )

அத்தை வீட்டு வழி கேட்டான் சொன்னேனடி
பிறகு ஆத்தங்கரை வழி கேட்டான் அதுவும் சொன்னேன்
வித்தகமாய் ஒன்று கேட்டு சத்தமிட்டாண்டி
கன்னத்தில் முத்தத்திற்கு வழி கேட்டு சத்தமிட்டாண்டி (தாயே )

அத்தை வீட்டு வழி கேட்டேன் மெய்யே
ஆத்தங்கரை வழி கேட்டேன் அதுவும் மெய்யே
நிலா மித்ததிற்கு வழி கேட்டேன் அதுதான் மெய்யே
இவள் சித்தத்துக்குள் என்னென்னவோ அம்மா ( இல்லை )